Puducherry / Regional / Bulletin / Tamil /18.10Hrs / 23.6.2024 / Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 19.6.2024 - ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

18ஆவது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் நாளை கூடுகிறது.

இந்தியாவின் வளர்ச்சியில் பங்களாதேஷ் முக்கிய பங்குதாரராக விளங்குகிறது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நாட்டில் வெள்ள மேலாண்மைக்கான தயார்நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்றது.

தேசிய தகுதி மற்றும் நீட் நுழைவுத் தேர்வில், முறைகேடுகள் நடந்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், தேசிய தேர்வு முகமையின் இயக்குநர் ஜெனரல் திரு. சுபோத் குமார் சிங் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

***மக்களவைத் முதல் கூட்டத்தொடர் (10)***

18ஆவது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் நாளை கூடுகிறது. அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில், பாஜக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி 292 இடங்களில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து, திரு. நரேந்திர மோடி தலைமையில் பாஜக அரசு 3ஆவது முறையாக ஆட்சி அமைத்துள்ளது. இந்நிலையில், 18ஆவது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் நாளை தொடங்க உள்ளது. இந்த கூட்டத்தொடரில், புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு, 26ஆம் தேதி மக்களவைத் தேர்தல், 27ஆம் தேதி குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, நாடாளுமன்றக் கூட்டுக்குழு கூட்டத்தில் உரை, ஆகியவை இடம் பெற உள்ளது. இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 3ஆம் தேதி முடிவடைகிறது.

***ஷேக் அசீனா -1 (19)***

இந்தியாவின் வளர்ச்சியில் பங்களாதேஷ் முக்கிய பங்குதாரராக விளங்குகிறது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், நேற்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் அசீனா, பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்த போது இருநாடுகளுக்கு இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 2 நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள பங்களாதேஷ் பிரதமர் ஷேக் அசீனாவுக்கு, குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று பாரம்பரிய முறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியும் பங்கேற்று, ஷேக் அசீனாவை வரவேற்றார். பின்னர் மத்திய அமைச்சர்கள் மற்றும் மத்திய அரசின் உயர் அதிகாரிகளை ஷேக் அசீனாவிற்கு பிரதமர் அறிமுகம் செய்து வைத்தார். இதனைத்

தொடர்ந்து வங்கதேச பிரதமர் ஷேக் அசீனா, பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது பல்வேறு ராஜ்ய உறவுகள், மற்றும் பல்வேறு அம்சங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தினர். அப்போது இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்படி இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், வங்கதேசத்தில் இருந்து இந்தியாவிற்கு மருத்துவ சிகிச்சை பெற வருவோருக்கு உடனடியாக இணையவழி மருத்துவ விசா வழங்கப்படும்.

***ஷேக் அசீனா -2 (15)***

அணுசக்தி, கடல் ஆராய்ச்சி, விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டு இருப்பதுடன், பங்களாதேஷிற்கான சிறிய ரக செயற்கைக் கோளை இரு நாடுகளும் இணைந்து உருவாக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த செயற்கை கோளை விண்ணில் செலுத்த இந்தியாவின் ஏவு வாகனங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. வங்கதேசத்தின் ராங்ப்பூரில் புதிய இந்திய துணைத் தூதரகம் தொடங்கப்பட உள்ளது. மேலும் கங்கை நீர் ஒப்பந்தத்தை புதுப்பிக்க தொழில்நுட்டப அளவிலான பேச்சுவார்த்தையை தொடங்க இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. கடல்சார் ஒத்துழைப்பு, நீலப்பொருளாதாரம், ரயில் போக்குவரத்து, பசுமை தொழில்நுட்பம், விண்வெளி, சுகாதாரம், மருத்துவம், பெருங்கடல் ஆய்வு, எல்லைத்

தாண்டிய டிஜிட்டல் ஆவணப் பரிமாற்றம், உள்ளிட்ட துறைகளின் ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. இதேபோன்று, கொல்கத்தா – சிட்டாங் இடையே பேருந்து சேவை, கொல்கத்தா – ராஜ்ஷாஹி இடையே பயணிகள் ரயில் சேவை, போன்றவையும் தொடங்கப்பட உள்ளது.

*நிர்மலா சீதாராமன் -1 (18)*

ஜிஎஸ்டி கவுன்சிலின் 53ஆவது குழுக்கூட்டம் நேற்று புதுடெல்லியில் நடைபெற்றது. இதில் எஃகு, அலுமினியம், இரும்பு, உள்ளிட்ட எந்த வகை உலோகத்தில் தயாரிக்கப்பட்ட பொருளாக இருந்தாலும், அவற்றிற்கு ஒரே சீராக 12 சதவிகிதம் ஜிஎஸ்டி வரி விதிக்க கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மேலும், ரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து சேவைகளுக்கும் ஜிஎஸ்டி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இதன்படி ரயில் நிலையங்களில் உள்ள ஓய்வறை, பொருட்கள் வைப்பு அறை, மின்சார வாகன சேவை மற்றும் பிளாட்பார டிக்கெட்டுகள் போன்றவற்றிற்கு இனி மேல் ஜிஎஸ்டி வரி கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் மாணவர்கள் தங்கும் விடுதிக்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். இந்த சலுகையைப் பெறும் மாணவர்கள், குறைந்தது 90 நாட்களுக்கு விடுதியில் தங்கி இருக்க வேண்டும் என்றும், அவர்களது

மாத வாடகை 20 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மற்றும் இமாச்சலப்பிரதேச ஆப்பிள் விவசாயிகள், பயன்பெறும் வகையில், அட்டைப் பெட்டிகளில் அடைத்து விற்கப்படும் ஆப்பிள்களுக்கு ஒரே சீராக 12 சதவிகித வரி விதிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

***நிர்மலா சீதாராமன் -2 (9)***

வரி ஏய்ப்பு முறைகேடுகளைத் தடுக்க நாடு முழுவதும் ஆதாார் அடிப்படையிலான பயோ மெட்ரிக் முறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். சிறு வியாபாரிகள் பயன்பெறும் வகையில், ஜிஎஸ்டி கணக்கு தாக்கல் செய்வதற்கான அவகாசம் இம்மாதம் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை, 73ஆவது பிரிவின்படி வழங்கப்பட்ட நோட்டிசுகள் மீது வட்டி மற்றும் அபராத வட்டியை தள்ளுபடி செய்யவும் ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

***முகர்ஜி – பிரதமர் (15)***

புகழ் பெற்ற சிந்தனையாளரும், கல்வியாளருமான டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் நினைவு தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர

மோடி அவருக்கு மரியாதை செலுத்தினார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில், டாக்டர் முகர்ஜி தனது வாழ்நாளை அன்னையின் சேவைக்காக அர்ப்பணித்தவர் என்று கூறினார். டாக்டர் முகர்ஜியின் ஆற்றல் மிக்க ஆளுமை நாட்டின் ஒவ்வொரு தலைமுறையினருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். இதேபோல், மத்திய அமைச்சரும், பாஜக தேசியத் தலைவருமான திரு. ஜே.பி. நட்டா, டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜிக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து புதுடெல்லியில் உள்ள பாஜக அலுவலகத்தில் அவர் மரக்கன்றுகளை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி பன்முகத்தன்மை உடையவர் என்று கூறினார். அவர் தமது வாழ்நாள் முழுவதும் சிறந்த தேசப்பக்தி உடையவராகவும், சிறந்த கல்வியாளராகவும், சமூக நீதியின் வழக்கறிஞராக திகழ்ந்தவர் என்றும் கூறினார்.

***அமித் ஷா (16)***

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நாட்டில் வெள்ள மேலாண்மைக்கான தயார்நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மணிப்பூர் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் குறித்து, விரிவான ஆய்வு நடத்தி உள்துறை அமைச்சகத்திடம் அறிக்கை சமர்பிக்குமாறு சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

மேலும் வடகிழக்கில் குறைந்தபட்சம் 50 பெரிய குளங்களையாவது பிரம்மபுத்திரா நதியின் நீரை திருப்பி அந்த குளங்களில் சேமித்து வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுலா ஆகியவை உள்ளூர் பொருளாதாரத்துக்கு பயனளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெள்ள மேலாண்மைக்காக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வழங்கிய அறிவுரைகளை உரிய நேரத்தில் அமல்படுத்துமாறு அவர் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

வெள்ள முன்னறிவிப்பில் பயன்படுத்தப்பட்ட அனைத்து உபகரணங்களையும் மறு சீரமைக்கும் செயல்முறையை முடிக்க இந்திய வானிலை ஆய்வு மையம், மற்றும் மத்திய நீர் ஆணையத்திற்கு அவர் உத்தரவிட்டார்.

***குற்றவியல் மாநாடு (12)***

குற்றவியல் நீதித்துறை நிர்வாகத்தில் இந்தியாவின் முற்போக்குப் பாதை குறித்த மாநாடு இன்று சென்னையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் புதிய 3 குற்றவியல் சட்டங்கள் வரும் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதால், புதிய சட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், இந்தியர்களை தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், காலனி

ஆட்சியாளர்கள் இந்த தண்டனை சட்டத்தை உருவாக்கினர் என்று கூறினார். நீதியை வழங்குவதற்காக இந்த புதிய 3 குற்றவியல் சட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். மாநாட்டில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இந்த 3 புதிய குற்றவியல் சட்டங்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சமூகத்திற்கு ஏற்றதாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

***நீட் தேர்வு -1 (19)***

தேசிய தகுதி மற்றும் நீட் நுழைவுத் தேர்வில், முறைகேடுகள் நடந்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், தேசிய தேர்வு முகமையின் இயக்குநர் ஜெனரல் திரு. சுபோத் குமார் சிங் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். பணியாளர் மற்றும் பயிற்சித் துறையில், திரு. சிங் கட்டாயக் காத்திருப்பில் வைக்கப்பட்டுள்ளார். இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பின் தலைவரும், எம்.டியுமான திரு. பிரதீப் சிங் கரோலாவுக்கு தேசிய தேர்வு முகமையின் இயக்குநர் ஜெனரலாக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தேர்வுகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, எடுத்து வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில், இது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் 2024ஆம் ஆண்டு நீட் நுழைவுத் தேர்வில் ஏதேனும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டால், குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு

தெரிவித்துள்ளது. நியாயமற்ற நடைமுறைகள் மற்றும் கேள்வித்தாள் கசிவு போன்றவற்றைத் தடுக்க மத்திய அரசு பொதுத்தேர்வு சட்டத்தைத் அறிவித்துள்ளது. இதன்படி குற்றவாளிகளுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், 1 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மேலும் 2024இல் நடைபெற்ற நீட் தேர்வில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் பற்றிய விசாரணை சிபிஐ இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

***நீட் தேர்வு -2 (17)***

நீட் தேர்வுகளை நியாயமாகவும், சுமூகமாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதற்கு தேசிய தேர்வு முகமை இஸ்ரோ முன்னாள் தலைவரும் , ஐஐடி கான்பூரின் தலைவருமான டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் தலைமையில் உயர்மட்ட நிபுணர் குழுவை மத்திய கல்வி அமைச்சகம் அமைத்துள்ளது. இந்த குழுவில் எய்ம்ஸ் முன்னாள் இயக்குநர் டாக்டர் ரன்தீப் குளோரியா மற்றும் ஐஐடி அமைப்பின் கல்வியாளர்களான திரு. ஆதித்யா மிட்டல், பேராசிரியர் இராமமூர்த்தி போன்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீட் நுழைவுத் தேர்வில் நடந்த முறைகேடுகள் குறித்து விரிவான விசாரணை நடத்த சிபிஐ-இடம் அரசு ஒப்படைத்துள்ளது. தேர்வின் புனிதத்தன்மையை உறுதிப்படுத்தவும், மாணவர்களின் நலனை பாதுகாக்கவும், அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம்

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. முறைகேடு புகாரில் எந்தவொரு தனிநபரோ, அல்லது நிறுவனமோ, சம்மந்தப்பட்டதாகக் கண்டறியப்பட்டால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதற்கிடையே இன்று நடைபெற இருந்த முதுநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தேர்வுக்கான புதிய தேதி விரைவில் அறிவிக்கப்படும் என மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***நீட் தேர்வு -3 (4)***

இதற்கிடையே நீட்-UG தேர்வில் வினாத்தாள் கசிவு தொடர்பாக விசாரணை மேற்கொள்ள சிபிஐ முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது. கல்வி அமைச்சகத்தின் புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

18ஆவது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் நாளை கூடுகிறது.

இந்தியாவின் வளர்ச்சியில் பங்களாதேஷ் முக்கிய பங்குதாரராக விளங்குகிறது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நாட்டில் வெள்ள மேலாண்மைக்கான தயார்நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்றது.

தேசிய தகுதி மற்றும் நீட் நுழைவுத் தேர்வில், முறைகேடுகள் நடந்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், தேசிய தேர்வு முகமையின் இயக்குநர் ஜெனரல் திரு. சுபோத் குமார் சிங் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / BR / RK